பெறுநர்
அனைத்து வட்டாட்சியர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

அனுப்புநர்
திரு.கா.மூர்த்தி B.Sc., B.L.
தொழிலாளர் உதவி ஆணையர்,
(சமூக பாதுகாப்புத் திட்டம்)
திருச்சிராப்பள்ளி.

ந.க.எண்: பதிவு/2021 நாள்: 09.06.2021

ஐயா,

பொருள்: அமைப்புசாரா தொழிலாளர்களின் இணையவழி விண்ணப்பங்களை கிராம நிர்வாக அலுவலர்கள் சரிபார்ப்பது தொடர்பாக – விபரம் தெரிவித்தல் - தொடர்பாக.

மேற்பொருள் தொடர்பாக, திருச்சிராப்பள்ளி தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகத்தில் Online-ல் பதிவு செய்துள்ள கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களது விண்ணப்பங்களை சரிபார்க்கும் பொழுது கிராம நிர்வாக அலுவலர்கள் கீழ் கண்ட விபரங்களை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1.அமைப்பு சாரா தொழிலாளர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக இருக்ககூடாது. தற்போது மேற்படி தொழிலாளர் விண்ணப்பித்த தொழிலைதான் செய்து வருகிறார் என்பது தெரியவந்தால் அவரது பெயர் உழவர் பாதுகாப்புத் திட்டத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்டு பின்னர் பரிந்துரைக்கப்பட பேண்டும்.

2.மேற்படி, விண்ணப்பதாரின் குடும்பத்தில் அரசு துறையில் எவரும் பணிபுரிய கூடாது.

3.மேற்படி, விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலை மேற்கொள்கிறாரா என்பதை சரிபார்க்கப்பட வேண்டும்.

4.கூடுதலாக, விண்ணப்பதாரர்கள் அளித்த மற்ற விபரங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட வேண்டும்.

09/6/2021

தொழிலாளர் உதவி ஆணையர்,
(சமூக பாதுகாப்புத் திட்டம்),
திருச்சிராப்பள்ளி.